# பிறர் நலனுக்கு முன்னுரிமையளித்தல்

யர்மூக் போர் நடந்துமுடிந்துள்ளது, ஹஜ்ரத் ஹுதைஃபா அத்வி (ர) தன் கையில் தண்ணீர் ஏந்தி தன் சகோதரரின் மகனை காயமடைந்து கிடப்பவர்களுக்கிடையில் தேடிக்கொண்டிருந்தார்கள். அவரைக்கண்டதும், இதோ தண்ணீர் பருகுங்கள் என்று கூறினார்கள். காயமடைந்து கிடந்த அவர் தாகம் என்று சைகை செய்த அதே நேரத்தில் பக்கத்தில் காயமடைந்திருந்த மற்றொருவரின் 'ஆஹ் தாகம்' எனும் குரல் கேட்டது. தன்னுடைய சிறிய தந்தையை காயமடைந்த மற்ற சகோதரருக்குத் தண்ணீர் அளிக்குமாறு சைகை காட்டினார். ஹஜ்ரத் ஹுதைஃபா (ர) அவர்கள் காயமடைந்தவரிடம் விரைந்து சென்றார். அங்கே ஹிஷ்ஷாம் பின் ஃஆஸ் (ர) அவர்கள் படுகாயமடைந்து மரணத்தருவாயில் இருப்பதைக் கண்டார்கள். ஹஜ்ரத் ஹுதைஃபா (ர) அவர்கள் அவருக்குத் தண்ணீர் ஊட்ட முற்படும் நிலையில் மற்ற ஒரு காயமடைந்தவரின் முனங்கொலியைக் கேட்டார், ஹிஷ்ஷாம் பின் ஃஆஸ் (ர) அவர்கள் அவரிடம் செல்லும்படி சைகை செய்துவிட்டார், ஹஜ்ரத் ஹுதைஃபா (ர) அவர்கள் அவரிடம் செல்வதற்கு முன்பே அவருடைய உயிர் பிரிந்துவிட்டது, விரைந்து ஹிஷ்ஷாம் பின் ஃஆஸ் (ர) அவர்களிடம் வந்தார், அவரும் மரணித்துவிட்டார் பின்பு தன் சகோதரரின் மகனிடம வந்து பார்த்தபோது அவரும் மரணமடைந்திருந்தார். இவ்விதமாக ஒவ்வொருவரும் தன்னுடைய சகோதரரின் தாகத்தைத் தணிக்கவேண்டும் என்று மற்றவர்களுக்கு முன்னுரிமையளித்து தாம் தாகத்துடன் தம் உயிரையே விட்டுள்ளனர்.

மற்றொரு சமயத்தில் ஒரு பெண் ஸஹாபிய்யஹ் (நபித்தோழியான பெண்) இறைத்தூதரிடம் ﷺ வந்து ஒரு போர்வையை அன்பளிப்பாக அளித்தார்கள். இறைத்தூதர் ﷺ அவர்களுக்கும் தேவையாகவே இருந்தது, அதனை ஏற்றுக்கொண்டு போர்த்தியும் கொண்டார்கள். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு நபித்தோழர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து அதே போர்வையை அழகாக உள்ளது, எனக்கு அளித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார். கேட்பவர் எவருக்குமே மறுக்காத இறைத்தூதர் ﷺ அவர்கள் போர்த்திக்கொண்டிருந்த அந்தப்போர்வையை மீண்டும் எடுத்து அவருக்கு அளித்துவிட்டார்கள். மற்ற நபித்தோழர்கள் அவரைச் சூழந்துகொண்டு என்ன வேலை செய்தீர்கள், உங்களுக்குத் தெரியும் அந்தப்போர்வை இறைத்தூதர் ﷺ அவர்களுக்குத் தேவைப்பட்டது, அத்துடன் இறைத்தூதர் ﷺ அவர்கள் யாருக்கும் இல்லை என்று மறுப்பதில்லை, இருந்தும், நீர் இவ்வாறு செய்துவிட்டீரே! அதனைக் கேட்டு வாங்கிய அந்த நபித்தோழர் அச்சமுற்று அவர்களிடம் கூறினார், அல்லாஹ்வின் மீது சத்தியம், நான் அதனை அணிவதற்காகக் கேட்டு வாங்கவில்லை, மாறாக இறைத்தூதர்

www.uzairfalahi.com

ﷺ அவர்களுடைய புனித உடலைத்தொட்ட அந்தத் துணி என்னுடைய கஃபனுக்கான துணியாக இருக்கவேண்டும் என்ற ஆசையினால்தான் இவ்வாறு செய்தேன் என்றார், அவ்வாறே நடந்தது (புக்ஹாரி). அவர் அந்தப்போர்வையைப் பத்திரமாக வைத்திருந்தார், அதே போர்வை அவருக்குக் கஃபனாகப் அணிவிக்கப்பட்டது.

இதுபோன்றே ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் மஸ்ஜிதில் அமர்ந் திருந்தார்கள், ஒருவர் பசியுடன் அங்கே வந்தார். இறைத்தூதர் ﷺ அவர் களுக்குத் தெரியவந்தபோது தன்னுடைய வீட்டில் சாப்பிட ஏதும் உண்டா என்று கேட்டபோது தண்ணீரைத்தவிர ஏதுமில்லை என்று பதில் வந்தது. இறைத்தூதர் ﷺ அவர்கள் தம் தோழர்களை நோக்கி இன்று இரவு இந்த விருந்தினருக்கு யார் விருந்தோம்பல் செய்வார்கள் என்று கேட்க, ஒரு அன்சாரி நபித்தோழர் நான் செய்வேன் என்றார். அவர் அந்த விருந்தினரை அழைத்துக்கொண்டு சென்று தன் மனைவியிடம் செய்தியைக் கூறினார். அவர் வீட்டிலும் குழந்தைகளுக்காக சிறிது உணவைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. கணவனும் மனைவியும் இதற்கான ஒரு தீர்வைக் கண்டறிந்தனர். அது, இருவரும் குழந்தைகளை மகிழ்வித்துத்தூங்கவைத்து விட்டு அந்த உணவை இறைத்தூதரின் ﷺ விருந்தினருக்குப் பரிமாறவேண் டும் என்பதாகும். தானும் விருந்தினருடன் சாப்பிட அமர்ந்து கொண்டு உணவு ஒருவருக்கே போதுமானது என்பதால், ஏதோ ஒரு வழியில் விளக்கை அணைத்துவிடுவது மற்றும் தானும் உடன் சாப்பிடுவதாக அவருக்கு முன் பாவித்து விருந்தினர் வயிறு நிறைய சாப்பிடவைக்க வேண்டும், மேலும், தான் சாப்பிடாது பசியுடனே இருந்தது அவருக்குத் தெரியவே கூடாது என்று திட்டமிட்டார். அவ்வாறே நடந்தது. பொழுது விடிந்தபின் அந்த அன்ஸாரி நபித்தோழர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்தபோது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், உங்கள் விருந்தோம்பல் காரணமாக அல்லாஹ் தஆலா மிகவும் பொருந்திக்கொண்டான் (முஸ்லிம்). இப்பின்னணியில், இந்த வசனம் அருளப்பட்டது:

وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ ﴿٩﴾ (الحشر: 9)

*பொருள்: தாங்களே தேவையுள்ளவர்களாய் இருந்தபோதிலும்கூட தங்களைவிடப் பிறருக்கே முன்னுரிமையளிக்கின்றனர். (அல் ஹஷ்ரு:9)*

அபுல் ஹசன் அன்த்தாக்கி என்ற ஒரு பிரபலமானவர் இருந்தார். ஒரு முறை அவரிடம் முப்பதுபேர் ஒரே சமயத்தில் விருந்தினர்களாக வந்தனர். இவ்வளவு பேருக்கும் அவரிடம் இருந்த ரொட்டிகள் போதுமானவையாக

www.Uzairfahi.com

இருக்கவில்லை. இதனால், அந்த ரொட்டிகளைத் துண்டுதுண்டுகளாக ஆக்கி அவர்களுக்குப் பரிமாறவேண்டும் மற்றும் விளக்கு அணைத்துவிட வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அவ்வாறே செய்யப்பட்டது மற்றும் அனைவரும் உண்பதற்காகப் பந்தியில் உட்கார்ந்தனர். அனைவரும் சாப்பிட்டுவிட்டதாகக் கூறியபின் விளக்கேற்றிப் பந்தியை அகற்றிய போது ரொட்டிகள் அனைத்தும் அப்படியே இருந்ததாகக் காணப்பட்டது. ஒவ்வொருவரும் மற்றவர் சாப்பிடவேண்டும் என்பதற்காக சாப்பிடாமலேயே தன் கையைத் தடுத்து வைத்திருந்தனர். ஒவ்வொருவரும் இவ்வாறே செய்த காரணத்தினால் அனைத்து ரொட்டிகளும் மீதமாக இருந்துவிட்டன.

இஸ்லாம் உருவாக்கும் ஒரு சமூகத்தின் காட்சி இங்கே பார்க்கலாம். இஸ்லாத்தில் ஒரு மனிதனுடைய வாழ்க்கைமுறை எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றது என்றால், அவன் தன்னலமற்று மற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் கருவியாக மாறிவிடுகிறான். உணர்வுபூர்வமாகவே மற்றவர்களுக்காவே வாழவேண்டும் என்ற நிலைக்கு கொண்டுசெல்லப்படுகிறான். எந்த உலக ஆதாயங்களுக்கு மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு ஒழுக்கக்கேடான செயல்களையெல்லாம் செய்கின்றார்களோ அவற்றைத் தன்னுடைய மனதில் இடம் தராமல் மற்றவர்களுக்காக விட்டுவைக்கிறான். தன்னுடைய தேவைகளைத் தள்ளிவைத்து மற்றவர்களுடைய ஆசைகளை நிறைவேற்ற முற்படுகிறான். தான் பசித்துத் தாகித்து மற்றவர்கள் திருப்தியுடன் சாப்பிடவேண்டும் என்று நினைக்கிறான். இந்த இஸ்லாமியப் போதனைகளின் பிரகாசத்தின் பலனாகவே மனிதர்களின் வரலாறு ஒளிர்ந்து பிரகாசிக்கின்றது. சகோரத்துவம் பரஸ்பர அன்பு மற்றும் மற்றவர்களுக்கு முன்னுரிமை, தியாக மனப்பான்மையின் நறுமணத்தினால் இஸ்லாமிய சமுதாயம் நறுமணம் வீசிக்கொண்டிருக்கின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

**لاَ يؤمن أَحَدُكُمْ حَتَّى بُحِبَّ لأَخِيْهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ**

*பொருள்: உங்களில் எவரும் எதுவரை தனக்காக எதை விரும்புகிறாரோ அதனையே மற்றவர்களுக்காகவும் விரும்பினாலன்றி முழுமையான ஈமான் கொண்டவர்களாக ஆகமுடியாது* **(متفق عليه)**. உம்முல் மூஃமினீன் ஆயிஷா (ர) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த காலமெல்லாம் மூன்று நாட்கள் தொடர்ந்து வயிறார சாப்பிட்டதே கிடையாது, நாங்கள் நினைத்திருந்தால் அவ்வாறு சாப்பிட்டிருக்க முடியும், ஆனால், நாங்கள் எப்போதுமே மற்றவர்களுக்கு முன்னுரிமைஅளித்து வந்துள்ளோம். மற்றவர் நலன் நாடுவது மற்றும் தியாக உணர்வைக் கொண்டிருப்பது இஸ்லாமியப் போதனைகளாகும், இவை

இஸ்லாமிய வரலாற்றின் சில காட்சிகளேயன்றி வேறில்லை. இன்று இஸ்லாமிய வழியில் நடப்பதாக உரிமை கொண்டாடுபவர்களிடம் தங்களுடைய வாழ்க்கை முறையினை இதன் கண்ணாடிக்குமுன் வைத்துப் பார்க்கும் தைரியம் உண்டா?

تمہیں آباء سے اپنے کوئی نسبت ہو نہیں سکتی
کہ تم گفتار وہ کردار تم ثابت وہ سیارا

* * *

www.uzairfalahi.com